[27th September 1958

Sri S. LAZAR : பொதுவான பாதைகளில், 4 இடங்களில் பாதை குறுக்கிட்டுச் சென்ற போதிலும் மூடு பாதைகள் போடப்படவில்லை என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. மூடு பாதைகளைப் போட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்போது வேறு என்ன புது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று நான் சொன்னேன்.

Sri A. GOVINDASAMY : இந்தக் குழந்தையைப் பறிகொடுத்த பெற்றோர்களுக்கு டால்மியா கம்பெனி ஏதாவது நஷ்ட ஈடு கொடுத்ததா ? இல்லையென்றால் டால்மியா கம்பெனியிடமிருந்து அவர்களுக்கு நஷ்ட ஈடு கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ரூ. 1,500 நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது.

Teak plantations

*552 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த மலைப்பிரதேசங்களிலே தேக்கு மரங்கள் இருக்கின்றன ?

(ஆ) தனிப்பட்டோர்களால் எந்தெந்த இடங்களிலே தேக்கு மரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன ?

(இ) 1957, 1958-ம் வருஷங்களிலே எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள தேக்கு மரங்கள் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் விற்பனை செய்யப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Teak is available in the natural forests in Gudalur, Coimbatore (South), Tirunelveli (North) and (South), Ramanathapuram and Madurai (South) Forest Divisions of this State. Extensive plantations have been made by the Forest Department in the forest divisions of Gudalur, Coimbatore (South), Coimbatore (North) and Tirunelveli (South). Teak is also now being artificially introduced by the Department in the east coast districts of Salem, Madurai, South Arcot, Tanjore and Tirunelveli.

(*b*) It has been reported that private individuals in various parts of the State raise teak trees to a small extent in their gardens but this is not on a plantation scale.

(*c*) The value of teak trees sold in Madras State during the year 1957 is Rs. 3·01 lakhs and that during 1958 is Rs. 3·82 lakhs. There were no exports of teakwood from this State to foreign countries during 1957 and during the period January to March 1958. Statistics of exports of teakwood to foreign countries during the subsequent months are not yet available.

Sri P. G. MANICKAM : ஸார், தேக்கு மரங்களை மற்ற காடுகளிலும் அதிகமாக உற்பத்தி செய்ய பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : காடுகளிலே மாத்திரமல்ல, ஆற்று ஓரங்களிலும் தேக்கு பயிரிடுவது இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. 1956–57-ல், 412 ஏக்கர்கள் பயிரிடப்பட்டது, 1957–58-ல், 813 ஏக்கரில் பயிரிடப்பட்டது, 1958–59-ல் 1,116 ஏக்கரில் பயிரிடப்

27th September 1958]

படும். அதோடு, இப்போது முன்பு ஜமீன் பிராந்தியங்களாயிருந்த கண்டம நாயக்கனூர் காடுகளிலும் தேக்கு பயிரிடுவது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Is there any proposal before the Government to request the Government of India to permit the import of teak from Burma in view of its prohibitive cost here?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I think there is no difficulty in importing teak.

SRI J. MATHA GOWDER: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூடலூரில் தேக்கு விளைவதாகச் சொன்னார்கள். கூடலூர், முதுமலைப் பகுதியில் சர்க்கார் பூமியில் மட்டுமல்லாமல் எல்லா பூமிகளிலும் தேக்கு பயிரிடுவதற்குத் திட்டம் வகுத்திருக்கிறார்களா? அப்படியானால், அது எத்தனை ஆண்டுகளில் பூர்த்தியாகும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்னென்ன செய்ய வேண்டுமோ, அதெல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: தேக்கு மரம் பயிரிடப் படக்கூடிய இடங்களில் நீண்ட நாளாக சர்க்கார் புறம்போக்கு நிலங்களை சாகுபடி செய்து கொண்டிருக்கும் சாகுபடியாளர்களுக்கு இடையூறில்லாமல், பாதுகாப்புக் கொடுத்து தேக்கு பயிரிட சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சாகுபடியாளர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றால், ஒரு ஏக்கரிலும் தேக்கு பயிரிட முடியாது.

SRI N. MAHALINGAM: ராஜ்யப் பிரிவினையால் நமக்கு எத்தனை ஏக்கர் தேக்குக் காடுகள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை. ஒரு பொருள் உரியவரிடம் சென்றால், அதை நமக்கு நஷ்டம் என்று கொள்ள முடியாது. ஆனால், நமக்கு ஏராளமாக காட்டுப் பிராந்தியம் குறைந்து இருக்கிறது.

Single teacher schools

* 553 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1954-ம் வருடம் அக்டோபர் முதல் 1957-ம் வருடம் அக்டோபர் முடிய மதுரை ஜில்லா போர்டில் நியமித்த ஓராசிரியர்கள் எத்தனை பேர்? 9-20 a.m.

(ஆ) அதில் ஹரிஜனங்கள் எத்தனை பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) 547.

(ஆ) 41.

SRI N. R. THIAGARAJAN: ஹரிஜனங்கள் எத்தனை பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசருக்கு எழுதியதில் 64 பேர் நியமிக்கப்பட்டிருப்பதாக எழுதினார். அவர்களுடைய பெயர்கள் வேண்டுமென்று கேட்டதற்கு, பெயர் ஜாபிதா கொடுக்கப்படவில்லை. 64 பேர்கள் நியமித்திருப்பதாகச் சொல்லுவது தவறு. இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் 40, 50 என்று கூறினார்கள். அதுவும் சரியில்லை. ஹரிஜனங்கள் ஒருவரும் நியமிக்கப்படவில்லை. ஆகையால், இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை......

MR. SPEAKER: The hon. Member is giving information. Why should he not write to the Hon. Minister?